# சர்ச்சை



**மனன வசனம்**

**நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின. யோவான் 1:17.**

**ஆராய்ச்சிக்கு**

**எபிரெயர் 8:6; மத்தேயு 19:17; வெளி 12:17; லேவி 23; அப் 15:1-29 கலா 1:1-12.**

அக்டோபர் 7 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

ஆதிகாலச் சபையில் முதலில் யூதர்களே அதிகம் இருந்தார்கள்; யூத மேசியாவாகிய இயேசுவை ஏற்றுக் கொண்டபிறகு, தங்கள் முற்பிதாக்களின் விசுவாசத்திலிருந்தும், தேவன் தம் மக்களுக்கு வாக்குரைத்திருந்த உடன்படிக்கையின் வாக்குறுதிகளிலிருந்தும் சில விதங்களில் தாங்கள் வழிவிலகியதாக கொஞ்சமும் நினைக்கவில்லை. அது சரிதான். யூதர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளவேண்டுமானால், அவர்கள் கிறிஸ்தவர்களாக மாறவேண்டுமா என்று ஒருபுறம் குழம்பினார்கள்; மறுபுறம், புறஜாதியார் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள வேண்டுமானால், அவர்கள் யூதர்களாக மாறவேண்டுமா என்றும் குழம்பினார்கள்.

பிற்பாடு எருசலேம் ஆலோசனைச் சங்கத்தில் இது குறித்து தீர்மானமான பதில் கிடைத்தது. பலவித சட்டத் திட்டங்களால் புறஜாதியாரைக் கஷ்டப்படுத்தக் கூடாதென ஆலோசனைச் சங்கம் தீர்மானித்தது. அதாவது, இயேசுவை ஏற்றுக்கொள்வதற்கு, புறஜாதியார் முதலில் யூதர்களாக மாறவேண்டிய அவசியமில்லை.

ஆனாலும், விசுவாசத்தை ஏற்றுக்கொண்ட புறஜாதியார் விருத்தசேனதம் உட்பட சகல சட்டத்திட்டங்களையும் கைக்கொள்ள வேண்டுமென்று போதகர்கள் சிலர் சபையை வாதித்துக்கொண்டிருந்தார்கள். விருத்தசேதனம் பண்ணிதான் கிறிஸ்தவ மார்க்கத்தில் சேரமுடியுமென்பது பெரியவர்களுக்கு ஒவ்வாத ஒன்று. ஆனால், உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களிலும் இஸ்ரவேலின் காணியாட்சியிலும் புறஜாதியாருக்குப் பங்கு கிடைக்க வேண்டுமானால், யூதச் சட்டத்திட்டங்களுக்கு அவர்கள் கீழ்ப்படிய வேண்டுமென பல யூதக் கிறிஸ்தவர்கள் நினைத்தார்கள்.

2017, அக்டோபர் 14 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

**எபி 8:6 சொல்லும் செய்தி என்ன? இந்த விசேஷித்த வாக்குத்தத்தங்கள்பற்றி நாம் எவ்வாறு அறிந்துகொள்ளலாம்?**

நாசரேத்தின் இயேசுவாகிய மேசியாவின் வருகைதான் புதிய ஏற்பாட்டுக் காலத்தின் துவக்கம்; இதுதான் பழைய ஏற்பாட்டுக் கால நம்பிக்கைக்கும், புதிய ஏற்பாட்டுக் கால நம்பிக்கைக்கும் இடையேயுள்ள மிகப்பெரிய வித்தியாசம். அவரை இரட்சகராக தேவன் அனுப்பினார். அவரைப் புறக்கணிக்கிற எவரும் இரட்சிக்கப்படமுடியாது. அவர் செய்த பாவநிவாரணத்தால்மட்டுமே மனிதர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. அவருடைய பரிபூரணமான வாழ்க்கை நம்முடையதாக எண்ணப்படுவதால்மட்டுமே தேவனுக்குமுன் குற்றமற்றவர்களாக நிற்கமுடியும். அதாவது, இயேசுவின் நீதியால்மட்டுமே இரட்சிப்பு கிடைக்கிறது; இதுதவிர வேறு வழியே இல்லை.

மேசியா காலத்து ஆசீர்வாதங்களையும் இரட்சிப்பின் வாக்குத்தத்தத்தையும் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்கள். தங்களை இரட்சிக்கிற மேசியாவாக தேவன் அனுப்பிவைத்த நாசரேத்தின் இயேசுவை மக்கள் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருந்தார்களா என்பதே புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கேள்வியாக இருந்தது! அவரை அவர்கள் நம்பியிருந்தால், அவரை மேசியாவாக ஏற்றுக்கொண்டு தங்களை அர்ப்பணித்திருந்தால், அவர் இலவசமாக அருளிய நீதியினால் அவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கக்கூடும்.

அதேசமயம், முந்தைய ஒழுக்கவிதிகளில் எந்த மாற்றமும் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் ஏற்படவில்லை; ஏனெனில், இவை தேவனுடைய குணத்தையும் கிறிஸ்துவின் குணத்தையும் அடிப்படையாகக் கொண்டவை. ஒழுக்கவிதிகளுக்குக் கீழ்ப்படிவது பழைய ஏற்பாட்டுக் காலத்தில் முக்கியமாக இருந்ததுபோல, புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் முக்கியமாகவே இருந்தது.

**புதிய ஏற்பாட்டிலும் ஒழுக்கப்பிரமாணம் காணப்பட்டது குறித்து மத் 19:17; வெளி 12:17; 14:12; யாக் 2:10,11 வசனங்கள் சொல்வது என்ன?**

அதேசமயம், இயேசுவையும் அவருடைய மரணத்தையும் பிரதான ஊழியத்தையும் சுட்டிக்காட்டும் விதத்தில் பழைய உடன்படிக்கையோடு சம்பந்தப்பட்டிருந்த சடங்காச்சாரப் பிரமாணங்கள் அனைத்தும் கைவிடப்பட்டன. ‘**விசேஷித்த வாக்குத்தத்தங்களின்**’ பேரில் ஒரு புதிய ஒழுங்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

யூதமார்க்கமானது கிறிஸ்தவ மார்க்கமாக மாறியதை யூதருக்கும் புறஜாதியாருக்கும் புரியவைப்பதே ரோமர் புத்தகத்தில் பவுலின் முக்கியமான நோக்கங்களில் ஒன்றாக இருக்கிறது. அந்த மாற்றம் நிகழ்வதற்கு கால அவகாசம் தேவைப்பட்டது. இயேசுவை ஏற்றுக்கொண்ட யூதர்களும்கூட, அதன்பிறகு உண்டாகவிருந்த மிகப்பெரிய மாற்றங்களை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இல்லை.

வேதாகமத்தில் உங்களுக்குப் பிடித்த வாக்குறுதிகள் யாவை? எவ்வளவுக்கு அவற்றைச் சொந்தம் கொண்டாடுகிறீர்கள்? இவை உங்கள் வாழ்க்கையில் நிறைவேறாதபடிக்கு நீங்கள் செய்யக்கூடிய என்ன தீர்மானங்கள் தடையாக இருக்கின்றன?

## யூத சட்டத்திட்டங்கள்



***லேவியராகமப் புத்தகத்தை (குறிப்பாக, லேவி 12,16, 23 அதிகாரங்களை) வாசிக்கும்போது, அவற்றிலுள்ள சட்டத்திட்டங்கள்பற்றியும், சடங்காச்சாரங்கள்பற்றியும் என்ன தோன்றுகிறது? இவற்றில் பெரும்பாலானவற்றைக் கைக்கொள்வது புதிய ஏற்பாட்டுக் காலத்தில் ஏன் இயலாததாக இருந்தது?***

பழைய ஏற்பாட்டு சட்டங்களை

**1) ஒழுக்கவிதி** **2) சடங்காச்சாரவிதி**

**3) சமூக விதி** **4) கட்டளைகள், நியாயங்கள்**

**5) சுகாதார விதிகள்** எனப் பிரிக்கலாம்.

இந்த வகைப்படுத்தல் செயற்கையானது. இவற்றில் சில ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. முற்காலத்தினர் இவற்றைப் பிரித்துப் பார்க்கவில்லை.

ஒழுக்கவிதிகள் மொத்தமும் பத்துக் கற்பனையில் கொடுக்கப்பட்டுள்ளன. யாத் 20:1-17. மனிதர்கள் கைக்கொள்ளவேண்டிய ஒழுக்கங்கள் இதில் சொல்லப் பட்டுள்ளன. வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்கள்முழுவதிலும் இந்தப் பத்துக் கற்பனைகளும் விளக்கமாகவும் நடைமுறை ரீதியாகவும் எடுத்துக்காட்டப்பட்டுள் ளன. பல்வேறு சூழ்நிலைகளில் தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்வது குறித்து அறிய இந்த விளக்கங்கள் உதவுகின்றன. சமூக விதிகளும் இவற்றோடு சம்பந்தமுள்ளவைதாம். குடிமக்கள் அதிகாரிகளோடும் சக மனிதர்களோடும் எப் படிப்பட்ட உறவை வைத்திருக்க வேண்டும் என்பதை இந்த விதிகள் கூறுகின்றன. பல்வேறு விதிமீறல்களுக்கான தண்டனைகளும் இவற்றில் சொல்லப்பட்டுள்ளன.

சடங்காச்சார விதியில் ஆசரிப்புக்கூடாரச் சடங்குகள்குறித்த ஒழுங்குகள் சொல்லப்பட்டிருந்தன; பல்வேறு பலிகள்பற்றியும் தனிநபருடைய கடமைகள் பற்றியும் விளக்கப்பட்டிருந்தன. பண்டிகை நாட்கள் குறித்தும், அவற்றைக் கைக் கொள்ளும்விதம் குறித்தும் விளக்கப்பட்டிருந்தது.

சுகாதார விதிகளில் பிற விதிகளும் அடங்குகின்றன. தீட்டானவை குறித்த பல்வேறு விதிகளில் சடங்காச்சாரத் தீட்டுகள்குறித்து விளக்கப்படுகின்றன; அது மட்டுமல்ல, சுகாதார மற்றும் ஆரோக்கிய விதிகளும் அவற்றில் சொல்லப்படுகின் றன. சரீர நலன்களை கருத்தில்கொண்டு சுத்தமான மற்றும் அசுத்தமான உணவுகள் குறித்த விதிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த விதிகள் எல்லாமே தேவனிடமிருந்து வந்தவை என்கிற எண்ணம் யூதர்களிடம் இருந்தாலும், ஒரு சில வித்தியாசங்களையும் அவர்கள் நிச்சயம் அறிந்திருப்பார்கள். அதாவது, பத்துக்கற்பனைகளை தேவன் நேரடியாகப் பேசி னார்; அவற்றின் முக்கியத்துவம் அதில் தெரிந்திருக்கும். மற்ற விதிகள் மோசே யின்மூலமாகச் சொல்லப்பட்டன. ஆசரிப்புக்கூடாரம் இருந்தவரைக்கும்தான் ஆசரிப்புக்கூடாரச் சடங்குகள் செய்யப்படவேண்டியவையாக இருந்தன.

யூதர்கள் தங்கள் சுதந்தரத்தை இழந்து, இன்னொரு தேசத்தின் ஆளுகைக் குள் வந்தபிறகு, அவர்களுடைய சமூக விதிகள் வழக்கற்றுப்போயின. தேவா லயம் அழிக்கப்பட்டபிறகு, சடங்காச்சார விதிகளையும் கைக்கொள்ள அவசிய மில்லாமல் போனது. மேலும், மேசியா வந்தபிறகு, நிழலானவைகள் நிஜமாக நிறைவேறியதால், அவை சுட்டிக்காட்டியவையும் வழக்கற்றுப்போயின.

## மோசேயினுடைய முறைமையின்படியே

***எதனால் கருத்து முரண்பாடு உண்டாகியிருந்தது? அப் 15:1. விருத்தசேதனம் பண்ணாதது யூத தேசத்திற்கு நல்லதில்லையென சிலர் ஏன் நினைத்திருக்கலாம்? ஆதி 17:10.***

---

அந்தியோகியாவில் அநேகரை கிறிஸ்துவுக்காக ஆயத்தப்படுத்தும்படி ஊழியர்கள் மற்றும் சுயாதீன அங்கத்தினர்களோடு சேர்ந்து அப்போஸ்தலர்கள் பாடுபட்டார்கள்; ஆனாலும், யூதேயாவிலிருந்து வந்திருந்த 'பரிசேய சமயத்தைச்' சேர்ந்த விசுவாசிகள் சிலர், சபையில் சர்ச்சையையும் விசுவாசிகளான புறஜாதியார் மத்தியில் திகிலையும் உண்டாக்கக்கூடிய ஒரு விஷயத்தைக் கிளப்பிவிட்டார்கள். அதாவது, விருத்தசேதனம்பண்ணி, மோசேயின் சடங்காச்சாரப் பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டால்தான் ஒருவர் இரட்சிக்கப்பட முடியுமென ஆணித்தரமாக இவர்கள் கூறினார்கள். தேவன் தங்களுக்கு நியமித்திருந்த ஊழியங்கள் குறித்து யூதர்களுக்கு எப்போதுமே பெருமை இருந்தது; மனமாறி கிறிஸ்துவை விசுவாசித்த பலரும்கூட, எபிரெய ஆராதனைமுறை குறித்து தேவன் தெளிவாகச் சொல்லியிருப்பதால், அதில் எதையாவது மாற்றுவதை அவர் அனுமதிக்க வாய்ப்பே இல்லையென நினைத்தார்கள். கிறிஸ்தவ மத முறைகளில் யூதச் சட்டங்களையும் சடங்காச்சாரங்களையும் புகுத்தவேண்டுமென வற்புறுத்தினார்கள். பலிமுறைகள் எல்லாமே தேவகுமாரனின் மரணத்தையே சுட்டிக்காட்டின என்பதையும், அவர் மரித்ததால் மோசேயின் பிரமாணத்தின்படி நடைபெற்று வந்த சடங்காச்சாரங்களும் ஆராதனைகளும் வழக்கற்றுப்போயின என்பதையும் அவர்களால் உடனே புரிந்துகொள்ள முடியவில்லை.

***இந்தப் பிரச்சனைக்கு எவ்வாறு தீர்வுகாண இருந்தார்கள்? அப் 15:2-12.***

---

'தேவனிடமிருந்து நேரடியாக வழிகாட்டலை எதிர்பார்த்தாலும், சபை ஐக்கியத்தில் இருந்த விசுவாசிகளின் அதிகாரத்தை அங்கீகரிக்க அவர் (பவுல்) தயங்கவில்லை. ஆலோசனை அவசியமென உணர்ந்தார்; முக்கியமான ஒரு பிரச்சனை உண்டானதுபோது, அதை சபையின் முன்னால் வைக்கவும், சரியான தீர்மானங்களை எடுக்கும்படி தன் சகோதரரோடு சேர்ந்து தேவனிடம் ஞானத்தைக் கேட்கவும் அவர் தயங்கவில்லை.'' - *EGW, AA, p 200.*

தன்னுடைய தீர்க்கதரிசன அழைப்புகுறித்தும், இயேசு தன்னை அழைத்து தன்னிடம் ஊழியப்பணியை ஒப்படைத்ததுகுறித்தும் பவுல் அடிக்கடி பேசினாலும், சபை எனும் பெரிய குடும்பத்துடன் சேர்ந்து செயல்பட அவர் ஆயத்தமாக இருந்தார். தன்னுடைய அழைப்பு எப்படிப்பட்டதாக இருந்தாலும், சபையில் தான் ஒரு அங்கத்தினன் என்றும், முடிந்தவரையில் அதோடு சேர்ந்தேதான் வேலைசெய்யவேண்டும் என்றும் அவர் உணர்ந்திருந்தார்.

---

சபையின் தலைவர்கள்குறித்து எப்படிப்பட்ட மனநிலையில் உள்ளீர்கள்? எவ்வளவுக்கு அவர்களோடு ஒத்துழைக்கிறீர்கள்? சபை எனும் பெரிய குடும்பத்தைப் புறக்கணித்துவிட்டு, அவரவர் தன் இஷ்டத்துக்குச் செயல்பட்டால் என்னவாகும்?

***ஆலோசனைச் சங்கம் என்ன தீர்மானத்திற்கு வந்தது? அப் 15:5-29. அது முன்வைத்த வாதம் என்ன?***

---

யூதமார்க்கத்தாரின் வாதங்கள் தவறென்று தீர்மானித்தார்கள். புறஜாதி விசுவாசிகள் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும் என்றும், சடங்காச்சாரப் பிரமாணம் முழுவதையும் கைக்கொள்ள வேண்டுமென்றும், 'கிறிஸ்தவ சமயமுறைகளில் யூதச் சட்டங்களும் சடங்காச்சாரங்களும் சேர்க்கப்படவேண்டுமென்றும்' இந்த மார்க்கத்தார் வற்புறுத்தினார்கள். - *EGW, AA, p 189.*

இந்தப் பழைய விதிகளை சுமக்கக்கூடாதிருந்த 'நுகத்தடி' என்று அப் 15:10 இல் பேதுரு சுட்டிக்காட்டுகிறார். இந்த விதிகளைக் கொடுத்தவர் தேவன்; தம் மக்களுக்கு சுமக்கமுடியாத பாரமாகக் கொடுத்திருப்பாரா? வாய்ப்பே இல்லை. மாறாக, ஆசீர்வாதமாகக் கொடுக்கப்பட்டிருந்த இந்த விதிகளை காலப்போக்கில் தலைவர்கள் சிலர் தங்கள் வாய்மொழிப் பாரம்பரியங்களினால் பெரும்பாலும் சாபமாக மாற்றினார்கள். இந்தப் பாரத்தை புறஜாதியார்மேல் சுமத்தாமல் அவர்களைத் தப்புவிக்க ஆலோசனைச் சங்கம் முயன்றது.

புறஜாதியார் பத்துக்கற்பனைகளுக்குக் கீழ்ப்படியவேண்டியதில்லை என்று அங்குச் சொல்லப்படவில்லை. இரத்தத்தைப் புசிக்கக்கூடாதென அவர்களுக்குச் சொன்ன ஆலோசனைச் சங்கம், விபசாரம் அல்லது கொலை சம்பந்தப்பட்ட கற்பனைகளை மீறலாமென்று சொல்லியிருக்குமா?

**புறஜாதியாருக்கு விதிக்கப்பட்ட குறிப்பிட்ட விதிகள் என்ன? அப் 15:20,29. ஏன்?**

---

---

யூத விசுவாசிகள் தங்கள் சட்டங்களையும் பாரம்பரியத்தையும் புறஜாதியார் மேல் திணிக்கக்கூடாது; அதே சமயம் இயேசுவை ஏற்றுக்கொண்ட யூதர்களுக்கு வருத்தம் தரக்கூடியவற்றை புறஜாதியார் செய்யக்கூடாதென ஆலோசனைச் சங்கம் உறுதியாகக் கூறியது. அதனால்தான், விக்கிரங்களுக்குப் படைக்கப்பட்ட உணவுகளுக்கும் வேசித்தனத்திற்கும் இரத்தத்திற்கும் நெருக்குண்டு செத்ததிற்கும் விலகியிருக்கும்படி புறஜாதியாருக்கு அறிவுரை கூறி கடிதம் எழுத அப்போஸ்தலர்களும் மூப்பர்களும் தீர்மானித்தார்கள். ஓய்வுநாள் ஆசரிப்பு அங்குக் குறிப்பிட்டுச் சொல்லப்படாததால், ஓய்வுநாள் புறஜாதியாருக்கானதல்ல என்று சிலர் கூறுகிறார்கள். கொலைசெய்யக்கூடாது, களவுசெய்யக்கூடாது என்கிற கற்பனைகளும்தான் அங்குக் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை; அதற்காக, அவற்றைச் செய்யலாமென அர்த்தமா?

தேவன் சொல்லியிருப்பதைவிட பாரம்பரியத்தை முக்கியப்படுத்தி, ஏதாவது விதங்களில் மக்கள்மேல் பாரங்களைச் சுமத்துகிறோமா? ஆம் என்றால், என்ன வழிகளில் சுமத்துகிறோம்? உங்கள் பதில்களை ஓய்வுநாள் வகுப்பில் கலந்தாலோசியுங்கள்.

ஆலோசனைச் சங்கம் எவ்வளவுதான் தெளிவாகச் சொல்லியிருந்தாலும் தங்கள் போக்கிலேயே போன சிலர், யூதப் பாரம்பரியங்களையும் விதிகளையும் புறஜாதியார் கைக்கொள்ள வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தினார்கள். இது விசுவாசத்தின் அற்புதமான கருத்துகளை அசட்டைசெய்ததோடு, கிறிஸ்துவின் சுவிசேஷத்தை மறுதலிக்கிற ஒன்றாகவும் இருந்தது; எனவே, பவுல் இதை இலேசாக விட்டுவிடவில்லை.

***கலாத்தியாவில் காணப்பட்ட இந்த விஷயத்தை பவுல் எவ்வளவு கடுமையாக அணுகினார்? கலா 1:1-12. இந்த விஷயத்தின் முக்கியத்துவம்பற்றி இதிலிருந்து என்ன தெரிகிறது?***

கலாத்தியாவில் காணப்பட்ட சூழ்நிலைதான் ரோமர் நிருபத்தை பவுல் எழுதுவதற்குப் பெருமளவில் காரணமாக இருந்தது. கலாத்தியர் நிருபத்தில் அவர் சொன்னவற்றையே ரோமர் நிருபத்திலும் பவுல் பேசுகிறார். மோசேமூலமாக தேவன் தங்களுக்குக் கொடுத்த விதிகள் முக்கியமானவை என்றும், மனமாறிய புறஜாதிகளும் அவற்றைக் கைக்கொள்ள வேண்டுமென்றும் யூத விசுவாசிகள் சிலர் வாக்குவாதம் செய்தார்கள். ஆனால், இதின் மெய்யான சாராம்சத்தையும் நிலையையும் தெளிவுப்படுத்த பவுல் முயல்கிறார். கலாத்தியாபோல ரோமிலும் இவர்கள் காலூன்றுவதை பவுல் விரும்பவில்லை.

கலாத்தியர் மற்றும் ரோமர் நிருபங்களில் பவுல் சடங்காச்சாரப் பிரமாணங்களைப்பற்றிப் பேசுகிறாரா அல்லது ஒழுக்கப் பிரமாணங்களைப்பற்றிப் பேசுகிறாரா என்று கேட்டால், குழப்பம் உண்டாகும். புறஜாதியார் விருத்தசேதனம் பண்ணப்படுவதும், மோசேயின் பிரமாணங்களைக் கைக்கொள்வதும் அவசியமா என்பதே அங்குக் கேள்வியாக இருந்தது. இதற்கு எருசலேம் ஆலோசனை சங்கம் தெளிவான ஒரு தீர்வைச் சொல்லியிருந்தது; ஆனாலும் சிலர் அதை மதிக்கவில்லை.

கலாத்தியர் மற்றும் ரோமர் நிருபங்களை வாசிக்கிற சிலர், ஒழுக்கப்பிரமாணமாகிய பத்துக் கற்பனைகளை (உண்மையில், அவர்கள் தாக்குதல் எல்லாம் நான்காம் கற்பனைமேல்தான்) கிறிஸ்தவர்கள் கைக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்று பவுல் அங்குச் சொல்லியிருப்பதாக வாதிடுகிறார்கள். அந்த நிருபங்கள் எழுதப்பட்ட வரலாற்றுப் பின்னணியை அவர்கள் விளங்கிக்கொள்ளாததே அதற்குக் காரணம். விசுவாசத்தினால்மட்டுமே இரட்சிப்பு, பிரமாணத்தையோ ஏன் ஒழுக்கப்பிரமாணத்தையோ கைக்கொள்வதால் இரட்சிப்பு இல்லை என்பதைத்தான் பவுல் அங்கு வலியுறுத்துகிறார். அதற்காக ஒழுக்கப்பிரமாணம் அவசியமில்லை என்று அர்த்தமல்ல. பத்துக்கற்பனைகளுக்குக் கீழ்ப்படியவேண்டுமா, வேண்டாமா என்பது ஒரு கேள்வியே இல்லை; கைக்கொள்ளவேண்டாம் என்று சொல்கிறவர்கள் பவுல் சொல்லாத ஒன்றை, அதாவது இன்றைய காலத்திற்கு வசதியான ஒன்றை வலியுறுத்துகிறார்கள்.

கிறிஸ்தவர்கள் இன்று ஓய்வுநாளைக் கைக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்று சொல்கிறவர்களுக்கு நீங்கள் என்ன பதில் சொல்வீர்கள்? நற்செய்தியின் ஒழுங்கிற்கு அபத்தம் உண்டாகாதவிதத்தில் ஓய்வுநாளின் சத்தியத்தை எவ்வாறு எடுத்துக்கூறுவீர்கள்?

நம் சபையிலும் கருத்துவேறுபாடு வரலாம். இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. சாத்தான் எப்போதும் சபையோடு யுத்தம் செய்து வந்திருக்கிறான். கிறிஸ்தவ மார்க்கம் தோன்றிய நாட்களிலும்கூட விசுவாசிகள் மத்தியில் கருத்துவேறுபாடு உண்டானது. தீர்வு கண்டிராவிட்டால், சபை அப்போதே அழிந்துபோயிருக்கும். அப்படிப்பட்ட ஒரு சர்ச்சை அங்கு உண்டானது.

“எருசலேமின் விசுவாசிகளில் இருந்த சில கள்ளப்போதகர்களின் செல்வாக்கால், கலாத்தியாவின் விசுவாசிகள்மத்தியில் பிரிவினையும் மதப்புரட்டும் சிற்றின்பப் பிரியமும் தீவிரமாகிவந்தன. நற்செய்தியின் சத்தியங்களோடு யூதப் பாரம்பரியங்களையும் இந்தக் கள்ளப்போதகர்கள் கலந்தார்கள். எருசலேம் ஆலோசனைச் சங்கத்தின் தீர்மானத்தை மதிக்காமல், சடங்காச்சாரப் பிரமாணத்தை புறஜாதியார் கைக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினார்கள்.”– *EGW, AA, p 383.*

# கலந்துரையாடக் கேள்வி

1. *புதன்கிழமை கடைசிக் கேள்விக்கு உங்கள் பதில் என்ன? நீங்கள் உங்கள் உள்ளூர்ச் சபையிலோ, உங்கள் வீடுகளிலோ, ஏன் உங்கள் மேலேயோ என்னென்ன விதங்களில் தேவையற்ற பாரங்களைச் சுமத்துகிறீர்கள்? இப்படிப்பட்டவர்களாக நாம் இருக்கிறோமா என்பதை எவ்வாறு உணரலாம்? அல்லது, கிறிஸ்துவுக்குள் நமக்குள்ள உன்னத அழைப்பை நம் வாழ்க்கை பிரதிபலிக்காத விதத்தில் நம் வாழ்க்கைமுறைகளிலும் தரங்களிலும் மிகவும் நிர்விசாரமாக வாழ்கிறோமா?*

2. *பத்துக் கற்பனைகளை கிறிஸ்தவர்கள் இன்று கைக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்பதற்கு என்னென்ன வாதங்களை முன்வைக்கிறார்கள்? அவற்றிற்கு நாம் எவ்வாறு பதிலளிக்கலாம்? அத்தகைய விவாதங்கள் ஏன் தவறானவை? பத்துக் கற்பனைகள் வழக்கொழிந்து போய்விட்டதாகச் சொல்கிறவர்கள், தங்கள் நம்பிக்கைக்கு உண்மையாக ஏன் வாழ்வதில்லை? (பத்துக் கற்பனை ஒழிந்துவிட்டால், அவர்கள் திருடலாம் அல்லவா? அவர்கள் ஏன் அப்படிச் செய்வது இல்லை?)*

3. *கலா 1:1-12ஐ மீண்டும் வாசியுங்கள். நற்செய்திபற்றி அவர் புரிந்துகொண்டதை சமரசத்திற்கு இடமின்றி, ஆணித்தரமாக, அதிக நிச்சயமாக பவுல் கூறுகிறார். ‘எம்மதமும் சம்மதம், சத்தியம் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது’ போன்ற மனநிலை அதிகமாகக் காணப்படுகிற இக்காலக்கட்டத்தில் ஒரு சில நம்பிக்கைகளில் நாம் கொஞ்சமும் தடுமாறாமல் இருக்கவேண்டியது அவசியமென்பதை இதிலிருந்து எவ்வாறு அறியலாம்?*

4. *புரொட்டஸ்டன்ட் சீர்திருத்தம் உண்டாவதற்குக் காரணமாக இருந்த விஷயங்கள் யாவை? என்ன அடிப்படை வேறுபாடுகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெர்ட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Hope TV India

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள். HopeChannel INDIA

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*